**கித்துல் அபிவிருத்திச் சபையின் கொடுக்கல் வாங்கல் மீதான அறிக்கை - 2024**

---

கித்துல் அபிவிருத்திச் சபையின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது அவதானிப்புக்கள் இநத அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தின் மற்றும் நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தினால் அந்த நிறுவனம் சம்பந்தமாக வருடாந்தம் மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தமது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக முறைப்படியாக ஏடுகளையும் அறிக்கைகளையும் பேணுதல் அத்தியவசியமானதாகும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்களானது, விதிகளினால் காட்டக்கூடிய வகையிலான காலப்பகுதியில் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையும் ஏனைய நிதிக்கூற்றுக்களும் தேவையான காலப்பகுதிக்குள் தயாரிக்கப்படுகின்றன என உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகிற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய திறைசேரி செயலாளரின் இலக்கம் பீஈ 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் அதற்கு இணங்கியதாக வெளியிடப்பட்ட செயற்பாட்டு கைநூளில் 6.6 பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2023 மற்றும் 2024 ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கையை 2025 செப்டம்பர் 15 வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரித்து பணிப்பாளர் சபை அங்கிகாரத்தை பெற்றுக் கொண்டிருந்த போதும் 2022 ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்று தொகுதியில் கணக்கீட்டு குறைபாடுகள் இருந்ததன் காரணமாக 2023 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீண்டும் தயாரிக்கப்பட்டன. சரி செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2025.09.17 ஆந் திகதி தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு வழங்கப்பட்டன. | நிதிக்கூற்றுக்களையும் வரைபு ஆண்டறிக்கையையும் உரிய காலப்பகுதிக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

**2.1 2022 திசெம்பர் 31 திகதிக்கு காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்களின் நிலைமைகள்**

சபையினால் இறுதியாக தயாரரிக்கப்பட்ட 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்ககளில் காண்பிக்கப்படும் சொத்க்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| **உருப்படி** | **தொகை ரூபா** |
|---|---|
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 378,891 |
| நடைமுறை சொத்துக்கள் | 335,581 |
| **மொத்த சொத்துக்கள்** | **714,472** |
| நடைமுறை பொறுப்புக்கள் | 308,613 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள | - |
| **மொத்த பொறுப்புக்கள்** | **308,613** |
| மொத்த உரிமை மூலதனம் | 405,859 |
| **மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **714,472** |
| மொத்த வருமானம் | 17,897,583 |
| மொத்த செலவினம் | 17,491,724 |
| **தேறிய இலாபம்** | **405,859** |

**2.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | **பிணை பதிவெடு**<br>பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களினது தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பிணை பதிவேடொன்றை தயாரிக்கப்ட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். பிணை பதிவேடொன்றை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிகப்பிரமாணம் பிரகாரம் தகவல்கள் உள்ளடங்குமாறு பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பதிவேடொன்றை பேணிக் கொள்ள வேண்டும். |
| **(ஆ)** | **சேதங்கள் மீதான பதிவேடு**<br>சேதங்கள் தொடர்பான பதிவேடொன்றை பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். சேதங்கள் தொடர்பான பதிவேடொன்றை பரராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய திறைசேரி செயலாளரின் இலக்கம் பீஈடீ 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் அதற்கு இணங்க வெளியிடப்பட்ட நிறுவன ரீதியான நல்லாட்சி தொடர்பான வழிகாட்டி கைநூலின் 2.3 பிரிவு | குறைந்தபட்சம் மூன்று வருட காலத்திற்காக கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்து அதன் பிரகாரம் முன்மொழியப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ள முடியுமானவாறு முயற்சியை வழிநடத்துவது பணிப்பளர் சபையின் முழுப் பொறுப்பாக இருந்த போதும் சபையினால் கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் சபையிற்கான கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திடம் (SLIDA) ஒப்படைக்கப்பட்டுள்ள துடன் இந்த ஆண்டில் இத் திட்டம் அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மூலோபாயத் திட்டத்தினை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளபடல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யட்டியந்தோட்டை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் 2022 ஆண்டு முதல் கித்துல் அபிவிருத்தி சபையினால் கித்துல் மெதுர பெயரில் கித்துல் உற்பத்தி விற்பனை நிலையமொன்றை நடாத்தியிருந்ததுடன் அதற்காக 2023 ஆண்டில் நவம்பர் 02 திகதி சபையினால் ரூபா 1,143,905 செலவிடப்பட்டு அந்த கட்டிடத்தின் நுழைவாயிலில் கிரில் வேலி அமைத்திருந்த போதும் இந்தக் கட்டிடத்தை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்காததுடன் எவ்வித பொருளாதார நடவடிக்கைக்கும் பயன்படுத்தாது விளைவற்று கானணப்பட்டது. | இந்த கட்டிடம் நீர் ஊற்றுகளுக்காக ஒதுக்கப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒதுக்கு நிலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக 2025.04.11 திகதிய யட்டியந்தோட்டை பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு பதில் ஆக எமது சபையினால் 2025.06.04 திகதியதாக அனுப்பிய கடிதத்தின் மூலம் ரூபா 1,121,564.07 தொகையை காசோலை மூலம் இந்த சபைக்கு செலுத்துமாறு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. | காணி மறறும் கட்டிடத்தை சுவீகரித்து ஆக்கபூர்வ கடமையொன்றிற்கு பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தெளிகம கிதுல் மெதுரவின் திருத்தத்திற்காக யட்டியந்தோட்டை பிரதேச செயலாளருக்கு 2024 திசெம்பர் 24 ஆம் திகதி வழங்கியிருந்த ரூபா 1,121,564 தொகையை கணக்காய்வு திகதி வரையும் குறித்த கடமைக்காக பயன்படுத்துவதற்கு அல்லது அந்த தொகை சபைக்கு மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கேகாலை மாவட்ட அபிவிருத்தி குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் மீது குழுத் தலைவர், அமைச்சு உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் எமது சபையின் உத்தியோகத்தர்களால் கள பரிசோதனை ஒன்றை 2025.09.11 திகதி மேற்கொண்டதுடன், அதன் பிரகாரம் நீரேந்து பிரதேசத்தில் காணப்படும் அக்காணியை அதிலிருந்து அகற்றி தீர்க்கவும், அரச தனியார் பங்குடமையின் கீழ் (PPP Model ) இங்கு எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், கித்துல் அபிவிருத்தி சபையினால் வழங்கப்பட்டுள்ள நிதிஏற்பாட்டை பயன்படுத்தி அந்த கட்டிடத்தை நவீனமயமாக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | காணி மறறும் கட்டிடத்தை சுவீகரித்து வழங்கப்பட்டுள்ள தொகையை ஆக்கபூர்வ கடமையொன்றிற்கு பயன்படுத்த வேண்டும். |

## 3.2 செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கித்துல் அபிவிருத்திச் சபையை ஸ்தாபிப்பதற்குரிய 2021 மார்ச் 17 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட காணிகளில் கிதுல் பயிரிடுவதற்காக உதவிகளை வழங்குதல், மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தல், கித்துல் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளில் கால்நடை வளர்ப்பில் ஈடுவடுவதனை மேம்படுத்துதல், கிதுல் பயிர்ச்செய்கைகளில் தென்னை மற்றும் ஏனைய பயிர்களை பயிரிடுவது தொடர்பாக பிரபல்யமும் மேம்படுத்துதலும் மற்றும் கித்துல் உற்பத்திப் பொருட்களை தயாரித்தல் ஆகிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன்.<br><br>2024 ஆம் ஆண்டில் இந்த சபையிக்கு சொந்தமாக போதுமான பதவியணியினர் இருக்காததுடன் பதில் கடமை அடிப்படையில் அமைச்சின் சில உத்தியோகத்தர்களால் சேவை செய்ததுடன் 2024 ஒக்டோபர் மாதம் முதல் நிரந்தர அடிப்படையில் 05 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர். நிரைவேற்று உத்தியோகத்தர் எவரும் நிரந்தர அடிப்படையில் சேவையாற்றவிலலை. எனவே மீளாய்வாண்டில் சபையினால் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்ற முடியவில்லை என அவதானிக்கப்பட்டது. | கித்துல் அபிவிருத்திச் சபையினை ஸ்தாபிக்கும் ஆரம்ப குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு தேவையான செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2024 ஆம் ஆண்டினுள் 05 கித்துல் முயற்சியாளர்களிற்கு நல்ல உற்பத்தி நடைமுறைகள் (GMP) சான்றிதழ்களையும் மற்றும் 10 முயற்சியாளர்களிற்கு கித்துல் அபிவிருத்தி சபை (KDB) சான்றிதழ்களையும் வழங்குவதற்காக ரூபா 1.7 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ள போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் குறித்த பணிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் கடமைகளுக்காக ஆரம்ப சாத்தியப்பாட்டு ஆய்வொன்றின் மூலம் செயற்திட்டங்களை செயற்படுத்தும் இயலுமையை ஆய்வு செய்து நிதிஏற்பாட்டை ஒதுக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (இ) | 2024 செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் வணிக பயிர்ச்செய்கை ஒன்றாக கிதுல் பயிர்செய்கையின் அபிவிருத்திக்காக மாதிரி கிதுல் காணியொன்றை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 700,000 தொகை நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ள பணிகளை நிறைவேற்றவும், ஒதுக்கப்பட்டுள்ள தொகையை ஆக்கபூர்வமாக பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2024 செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் முன்னேற்றத்தை பரீட்சிக்கும் போது கிதுல் அபிவிருத்தி சபைகக்காக நிகழ்நிலை மேடையொன்றை உருவாக்குவதன் கீழ் பயிற்சி மற்றும் அறிவுருத்தும் 3 இனை நடாத்துவதற்காக ரூபா 700,000 நிதிஏற்பாடு செய்திருந்த போதும் மீளாய்வாண்டில் எவ்வித நிகழ்ச்சித் திட்டத்தையும் நடாத்தி இருக்கவில்லை. | -மேற்படி- | கித்துல் அபிவிருத்தி சபையின் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியுமானவாறு நிகழ்ச்சிதிட்டங்களைத் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று மற்றும் வருடாந்த பண்டகக் கணிப்பீட்டு அறிக்கையை கணக்காய்விற்கு வழங்கியிருக்கவில்லை. | 2022/2023 ஆண்டுகளில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பராமரித்துச் சென்றிருக்கவில்லை. | சபையினால் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பராமரிக்க வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் 39 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் 07 உள்ளவாறான பதவியணியினரும் ஆனதுடன் உள்ளக கணக்காய்வாளர் பதவி, 15 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் மற்றும் 04 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும் மீளாய்வாண்டின் இறுதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டன. | பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான வெற்றிடங்கள் தொடர்பாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுக்கு அறிவூட்டப்பட்டுள்ளது. | சபையின் செயற்பாடுகளை முறைப்படியாக நிறைவேற்றுவதற்கு தேவையான பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் தாமதமின்றி மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |